# Thirukkural & Gandharalankaram: A Study on Charity-Related Ideas

**C. Anitharani**
*Assistant Professor (Self-financing Wing), Department of Tamil*
*Pioneer Kumaraswamy College, Nagercoil*

**Objective of the Study**

The purpose of this paper is to highlight the concepts of charity found in both Thirukkural, a work on ethics, and Gandharalankaram, a spiritual text.

**Abstract**

*Literature plays a vital role in guiding people along a righteous path without deviation. Its very purpose is to teach man how to live as a human being and to refine and elevate his life. Bhakti literature, in particular, was written with the aim of helping man attain spiritual liberation. When a person abides by moral principles, worldly life becomes free from suffering — this is the fundamental idea of both ethical and spiritual texts. Religion is based on God, while ethics is centered on man. A person devoted to religion is generally also devoted to ethics. In this regard, the concepts of charity — its meaning, greatness, benefits, sharing with others, the inability to give, and the state of the non-giver — are elaborated in both Thirukkural and Gandharalankaram. This study examines these aspects in detail.*

***Keywords:*** *Music & Praise – The Deprived – The Poor – Broken Rice (Kurunocci) – Final Journey of the Soul – Loss of Righteous Path – Kandhu (ritual staff) – Lord Muruga.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255980

**References**

1. Arunagirinathar – Gandharalankaram, with commentary by Thirumuruga Kripanandavariyar, Vanathi Publications, Chennai, 8th Edition, 1986.
2. Ilampooranar (Commentary) – Tholkappiyam – Porulathikaram, Saradha Publications, Chennai.
3. Tamilannal (Commentary) – Thirukkural – Detailed Commentary, Manivasagar Publications, Chennai.

# திருக்குறள் – கந்தரலங்காரம் சுட்டும் ஈகையறச் செய்திகள்

***சி. அனிதாராணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
பாயோனியர் குமார சுவாமிக் கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுநோக்கம்***

*அறநூல்களுள் ஒன்றான திருக்குறளிலும், ஆன்மீக நூலான கந்தரலங்காரத்திலும் இடம்பெறும் ஈகையறச் செய்திகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

***ஆய்வுச் சுருக்கம்***

*மக்களை நெறி பிறழாமல் நடத்திச் செல்வதில் இலக்கியங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இலக்கியம் படைக்கப்படுவதே மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவதற்கும் அவனுடைய வாழ்வை செம்மைப்படுத்தி உயர்த்துவதற்கும் ஆகும். பக்தி இலக்கியங்கள் மனிதன் ஆன்மீக விடுதலையைப் பெற உதவுவதற்கே எழுதப்பட்டிருக்கின்றன. மனிதன் அறநெறிக்கு உட்பட்டு இயங்கும் போதுதான் உலகியல் வாழ்வு துன்பமின்றி அமையும் என்பது அற மற்றும் ஆன்மீக நூல்களின் அடிப்படைக் கருத்தாகும். இறைவனை அடிப்படையாகக் கொண்டது சமயம். மனிதனை அடிப்படையாகக் கொண்டது அறம். சமயத்தில் ஈடுபாட்டுடன் விளங்கும் மனிதன் பொதுவாக அறத்தில் ஈடுபாட்டுடன் இருப்பதை காணமுடியும், அவ்வகையில் ஈகை – விளக்கம், ஈதலின் சிறப்பு, ஈதலின் பயன் பகிர்ந்து உண்ணுதல், ஈதல் இயலாமை, ஈயாதார் நிலை என்ற தலைப்புகளின் வாயிலாக திருக்குறள் - கந்தரலங்காரம் ஆகிய நூல்களில் இடம்பெறும் ஈகை பற்றியச் செய்திகளை விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *இசை - புகழ், அற்றார் - வறியவர், நொய்யரிசி - உடைபட்ட இடிந்த அரிசி (குறுநொய்) கடைவழி-மனிதன் இறந்த பின்னும் அவனுடைய ஆன்மா மேலுலகத்திற்குச் செல்லும் கடைசிப் பாதை தப்புந -கிடைக்காமல் இழக்கப்படுவன, கந்து-பற்றுக்கோடு, கந்தன் - முருகபெருமான்.*

**முன்னுரை**

வள்ளுவன் ஒரு பன்முக அறிஞன். அவர் தொட்டுக்காட்டி விளக்கம் தராத துறை இல்லை. மனிதனின் சமுதாய வாழ்விற்குத் தேவையான அறநெறிகளையும், அறிவுரைகளையும் கூறும் வாழ்வியல் நூலாகத் திகழ்கின்றது திருக்குறள். ஈகை யறம் பற்றிய செய்திகள் திருக்குறளில் பல இடங்களில் காணப்படுகின்றது. பக்தி இலக்கியங்களிலும் ஈதலின் மேன்மைச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக அருணகிரிநாதர் இயற்றிய கந்தரலங்காரத்தில் ஈகையும் பல இடங்களில் இடம்பெறுகிறது. அருணகிரிநாதர் பாடியருளிய திருப் பாடல்கள் ஆழங்காண முடியாத தமிழ்ப் பக்திக் கடலாகும். அவர் அருளியுள்ள திருப்பாடல்களுக்குத், தெளிவான உரை என்பது அரிதினும் அரிதாகும் என்பது ஆன்றோர் வாக்கு. கந்தரலங்காரத்தில் இடம்பெற்றுள்ள அறநெறிக் கோட்பாடுகள் மனதைக் கட்டுப்படுத்தல், கோபம் கொள்வதைத் தவிர்த்தல், வறியவர்களுக்குப் பொருளுதவி செய்தல் முதலியன ஆகும். ஈகையறம் பற்றியச் செய்திகளை திருக்குறளும் கந்தரலங்காரமும் பதிவு செய்திருப்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**ஈகை – விளக்கம்**

> **'ஈ, தா, கொடு எனக் கிளக்கும் மூன்றும்**
> **இரவின் கிளவி ஆகிடன் உடைய"**
> ***(தொல்-எச். 927)***

ஈ, தா, கொடு என்று கூறப்படும் மூன்று வினைச்சொற்களும் ஒருவன் மற்றவனிடம் இரத்தற்கண் கூறும் சொல்லாதற்குரியன என்கிறார் தொல்காப்பியர்.

**'ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்**
**பார்த்து இருந்து உண்மின்பழம் பொருள் போற்றன்மின்**
**வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணண்மின்**
**காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே"**

***(திருமந். பா. 250)***

என்று ஈகையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார் திருமூலர்.

எவன் ஒருவன் பசியால் வருந்துகிறானோ, அவனது பசியைத் தீர்ப்பதற்கு உதவி செய்வது தான் ஈகை என ஈகைக்கு விளக்கம் கொடுக்கிறார் வள்ளுவர். இதனை,

**'வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகைமற்று எல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**

***(குறள்.221)***

என்று குறளில் குறிப்பிடுகின்றார்.

**'இருபிடிசோறு கொண்டு இட்டு உண் டிடுவினையோம்**
**இறந்தால் ஒருபிடி சாம்பரும் காணாது மாயஉடம்பு இதுவே"**

***(கந்தர் அலங். பா. 57)***

என்ற பாடலில் யாசிக்கும் வறியவர்களுக்கு ஒரு பிடியளவு சோறாவது கொடுத்து உதவிய பிறகு நீயும் சாப்பிட்டு இருப்பாயாக நாம் இறந்துவிட்டால் இவ்வுடல் ஒரு பிடியளவு சாம்பலும் ஆகாது ஒழியும் தன்மை உடையது என்கிறார் அருணகிரிநாதர்.

வறியவன் ஒருவனுக்கு ஈவதே செல்வம் பெற்றதின் உண்மையானபயன். இல்வாழ்வான் கடமைகளில் இது முதன்மையானது. இல்லறத்தில் வாழ்பவர் பிறர் பயன்படும் படி ஈகை புரிந்து வாழவேண்டும் என்பதையே திருவள்ளுவரும் அருண கிரிநாதரும் தத்தமது பாடல்களில் வலியுறுத்துகின்றனர்.

### ஈதலின் சிறப்பு

**'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"**

***(குறள். 231)***

இந்த உலகத்தில், பிறர் புகழும் வகையில் வாழும் வாழ்க்கைத் தான் பயனுடையது. அந்தப் புகழைப் பெறுவதற்கு வறியவர்களின் பசியைத் தீர்க்கும் பணியான ஈகையைச் செய்ய வேண்டும். அது தான் புகழ் பெறுவதற்குரிய வழி என்கிறார் வள்ளுவர்,

அருணகிரிநாதரோ ஈகை செய்தால் முருகபெருமானது திருவருள் தானாகவே வந்து வெளிப்பட்டு உங்களை ஆட்கொள்ளும் என்கிறார். இதனை,

**'தடுங்கோள்மனத்தைவிடுங்கோள்**
**வெகுளியைதானம்என்றும்**
**இடுங்கோள்"** ***(கந்தர். அலங். பா.16)***

என்னும் பாடலில் மனத்தை ஐம்புலன்களின் வழியே செல்லவிடாமல் தடைசெய்யுங்கள். கோபத்தையும், வெறுப்பையும் அறவே விடுங்கள். எப்போதும் ஏழைகளுக்குத் தானம் கொடுத்து கொண்டிருங்கள். இறைவனின் திருவருள் கிடைக்கும் என்கிறார்.

### ஈதலின் பயன்

வறியவரின் கடும்பசியைத் தீர்த்து வையுங்கள். அதுவே பொருள் பெற்றவன் அப்பொருளை தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் என்கிறார் வள்ளுவர். இதனை,

**'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றாள் பொருள் வைப்புழி"**

***(குறள்.226)***

என்ற குறட்பாவினால் உணரலாம்.

**'கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர்இ**
**நிலையானமாதவம் செய்குமினோ**
**நும்மைத் தேடிவரும்**
**தொலையா வழிக்குப் பொதிச்சோறும்**
**உற்றதுணையும் கண்டீர்"**

***(கந்தர். அலங். பா.51)***

என்ற பாடலில் இலைக்கறியை ஆயினும், வெந்ததாகிய எந்தப் பொருள் ஆயினும், பங்கு செய்து கொடுக்கும் பெரும்தவத்தை நீங்கள் செய்தீர்கள் என்றால் அது உங்களைத் தேடிக்கொண்டு வருகின்ற தொலையாத கடை வழிக்கு அது உதவி செய்யும் என்கிறார்.

**பகிர்ந்து உண்ணுதல்**

***'பாத்தூண்மரீ இயவனைப் பசியென்னும்***
***தீப்பிணி தீண்டல் அரிது"***

***(குறள்.227)***

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை என்பார் திருவள்ளுவர்.

இந்த உலகில் வெயில் காலத்தில் ஒதுங்கி நிற்கக் கூட உதவாத இந்த உடலின் பயனற்ற நிழலைப் போல தனது இறுதி வழிக்கு உங்கள் கையிலுள்ள பொருள் எனப்படுவதாகிய செல்வமும் துணை செய்யமாட்டாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆகவே செல்வத்தின் நிலையாமையைக் கண்டு கொண்டும், உணர்ந்து கொண்டும், கூர்மையானதும், ஒளிவீசும் படியாகவும், அழகானதுமான வேலையுடைய திருமுருகப் பெருமானைத் துதித்துவினையின்காரணமாகதரித்திரனாக இருப்பவனுக்கு எப்போதும் அரிசியில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டதான நொய்யுணவை உண்பவராக இருந்தாலும் பகிர்ந்து உண்ணுங்கள் என்பதை,

***'வையின் கதிர் வடிவேலோனை***
***வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்***
***நொய்யின் பிளவு அளவேனும்***
***பகிர்மின்கள் நுங்கட்கு இங்கன்***
***வெய்யிற்கு ஒதுங்க உதவா***
***உடம்பின் வெறு நிழல்போல்***
***கையில் பொருளும் உதவாது***
***காணும் கடை வழிக்கே"***

***(கந்தர்.அலங். பா.18)***

என்ற பாடலின் வாயிலாக வறுமை இருப்பினும் பகிர்ந்து உண்ணுங்கள் என்று வலியுறுத்துகின்றார் அருணகிரிநாதர்.

***'தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு***
***என்னது மாடு என்று இருப்பார்கள்***
***ஏழைகள்"***

***(திருமந். பா.170)***

என்று திருமந்திரம் செல்வம் நிலையாமையை எடுத்துரைக்கும் பாடல் வரிகளுடன்

***'காதற்ற ஊசியும் வாராது காணும்***
***கடைவழிக்கே"***

எனும் பட்டினத்தாரின் பாடல் வரிகளுடனும் ஒப்பு நோக்கி சிந்திக்கத்தக்கது.

***'செல்வத்து பயனேஈதல்***
***துய்ப்போம் எனினே***
***தப்புநபலவே"*** ***(புறம்.189:7-8)***

என்றப் புறப்பாடலும் இக்கருத்தினை எடுத்துரைக்கும்.

**ஈதல் இயலாமை**

வறியவர்களுக்கு கொடுப்பதற்கு மனம் இருந்தும் பணம் இல்லாதவர் நிலையே ஈதல் இயலாமை எனப்படுகின்றது. ஒருவனுக்கு இறத்தலைப் போலத் துன்பம் தருவது வேறொன்றும் இல்லை. ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாதநிலை வரும்போது அந்த இறப்பும் இனியதே ஆகும். என்பதனை,

***சாதலின் இன்னாதது இல்லைஇனிது***
***அதூஉம்***
***ஈதல் இயையாக் கடை***

***(குறள். 2130)***

என்ற குறட்பா வாயிலாக விளக்குகின்றார் திருவள்ளுவர்.

***'சாகைக்கும் மீண்டும் பிறக்கைக்கும் அன்றித்***
***தளர்ந்தவர்க்கு ஒன்று***
***ஈகைக்கும் எனை விதித்தாயிலையே"***

***(கந்தர். அலங். பா .54)***

இறப்பதற்கும் மீண்டும் திரும்பத் திரும்பப் பிறப்பதற்கும் அல்லாமல் வறுமையில் தளர்வுற்றவர்களுக்கு ஒரு பொருளைக்

கொடுத்து உதவி செய்வதற்கு அடியேனை விதிக்கவில்லையே என்று அருணகிரிநாதர் தன் கந்தரலங்காரத்தில் கூறுவதன் மூலம் ஈகை செய்வதே மனிதனின் அறம் என்பதனைப் புலப்படுத்துக்கின்றார்.

**ஈயாதார் நிலை**

**ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்தாமுடைமை**
**வைத் திழக்கும்வன் கணவர்**

**(குறள். 228)**

தாம் சேர்த்துள்ள செல்வத்தைக் காப்பாற்றி வைத்துப் பின் இழந்து விடும் கல்நெஞ்சர்கள், பிறருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறிய மாட்டார்கள் என்கிறார் திருவள்ளுவர். இக்கருத்தையே அருணகிரிநாதர்,

**'பாடிக்கசிந்து உள்ள போதே**
**கொடாதவர் பாதகத்தால்**
**தேடிப் புதைத்துத் திருட்டில் கொடுத்து**
**திகைத்து இளைத்து**
**வாடிகிலே சித்து வாழ்நாளை**
**வீணுக்குமாய்ப்பவரே"**

**(கந்தர். அலங்பா.80)**

என்ற பாடலின் வழியாக முருகனை நினைத்து பக்தியினால் பாடி மனம் கரைபவர்களாக இருந்தாலும், தம் கையில் பொருள் உள்ள காலத்திலேயே யாசி த்தவர்க்குக் கொடாதவர்கள் பல வகை களில் பொருளைச் சம்பாதித்து மண்ணில் புதைத்து, திருடர்களுக்கு கொடுத்து மனம் பிரமித்து உடல்மெலிந்து வாடி துக்கப்பட்டு தமது ஆயுட் காலத்தை வீணிலே அடிக்கின்றவர்களே ஆவார் என்கிறார்.

வறியவர்களுக்கு ஈயாதவர்களுக்கு இன்பம் இல்லை என்று வள்ளுவரும், இறைவனே துணை வரமாட்டான் என்று அருண கிரிநாதரும் இப்பாடல்கள் வழி விளக்குகின்றனர்.

**முடிவுரை**

ஈகைப் பண்பு மனிதனுக்குப் புகழையும், இறைவன் திருவருளையும் பெற்றுத் தரும் வல்லமை உடையது என்பதை அறிய முடிகிறது. எவன் ஒருவன் பசியால் வருந்து கிறானோ, அவனது பசியைத் தீர்ப்பதற்கு உதவி செய்வது தான் ஈகை எனப்படுகிறது. கடைவழிக்கு உதவும் ஒரு கருவியாக ஈகை திகழ்வதைக் காண முடிகின்றது. வறியவன் ஒருவனுக்கு ஈவதே செல்வம் பெற்றதின் உண்மையான பயன் என்றும் குறைவான செல்வம்பெற்றிருப்பினும், பகிர்ந்துஉண்ணுங்கள் என்பன போன்ற கருத்துக்களை திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளிலும், அருண கிரிநாதர் தன்னுடைய கந்தரலங்காரத்திலும் எடுத்துரைத்துள்ளனர். இவ்வாறு இவ்விரு நூல்களும் வெவ்வேறான கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும், அவை உணர்த்தும் செய்திகள் ஒன்றினை ஒன்று ஒத் திருப்பதனை இக்கட்டுரையின் வழி நாம் அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. அருணகிரிநாதர் - கந்தரலங்காரம், திருமுருக கிருபானந்தவாரியார் (உரையாசிரியர்), சென்னை, வானதி பதிப்பகம், 8ஆம் பதிப்பு 1986.
2. இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.
3. தமிழண்ணல் (உ.ஆ) - திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.